**தலைப்பு – 149 – கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சு மற்றும் அவ் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் சம்பந்தமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2013 ஆம் ஆண்டு**

---

இவ்அறிக்கை இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

1 ஆவது பகுதி- அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் சம்பந்தமான சுருக்கமான அறிக்கை

2 ஆவது பகுதி- ஒவ்வொரு தலைப்பிற்கும் உரிய விபரமான அறிக்கை

## I ஆவது பகுதி

**கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சு மற்றும் அவ் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் சம்பந்தமான சுருக்கமான அறிக்கை**

---

### 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

| தலைப்பு | திணைக்களம் |
|---|---|
| 295 | வர்த்தகத் திணைக்களம் |
| 297 | கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் |
| 299 | இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம் |
| 303 | புடவைக் கைத்தொழில் திணைக்களம் |

### 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவுகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 04 திணைக்களங்களுக்காக வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஏற்பாடுகள் ரூபா 964,056,559 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் இதில் ரூபா 1,802,167,741 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சு மற்றும் ஒவ்வொரு திணைக்களங்களின் தேறிய ஏற்பாட்டில் சேமிப்பு ரூபா 2,197,728 இற்கும் ரூபா 936,016,957 இற்கும் இடையிலான வீச்சில் அல்லது தேறிய ஏற்பாட்டில் 4 சதவீதத்திற்கும் 41 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் இருந்தன. விபரம் பின்வருமாறு.

| தலைப்பு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடுகள் | பயன்பாடுகள் | சேமிப்பு | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 149 | 2,283,700,000 | 1,347,683,043 | 936,016,957 | 41 |
| 295 | 107,401,000 | 101,608,156 | 5,792,844 | 5 |
| 297 | 28,550,000 | 26,352,272 | 2,197,728 | 8 |
| 299 | 20,925,000 | 12,902,075 | 8,022,925 | 38 |
| 303 | 325,648,300 | 313,622,195 | 12,026,105 | 4 |
| மொத்தம் | 2,766,224,300 | 1,802,167,741 | 964,056,559 | |

## 2.2 வருமானக் கணக்குகள்

### மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களமொன்றினால் 2013 ஆம் ஆண்டிற்காக இரண்டு வருமானக் குறியீடுகளுக்காக ரூபா 105 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 141 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 37 சதவீதத்தினாலும் 39 சதவீதத்தினாலும் மிகைத்து வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

| வருமானக் குறியீடு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | மிகை மதிப்பீட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 20.03.02.10 | 100,000,000 | 134,005,630 | 34,005,630 | 34 |
| 20.03.02.12 | 5,000,000 | 6,966,000 | 1,966,000 | 39 |
| மொத்தம் | 105,000,000 | 140,971,630 | 35,971,630 | 34 |

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள ஐந்து திணைக்களங்களினால் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த பின்வரும் எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறான | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறான | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறான |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 14901 | 12,000,000 | 7,291,800 | 8,000,000 | 9,484,464 | 55,000,000 | 36,721,676 |
| 29501 | 5,000,000 | 4,850,459 | 2,000,000 | 4,011,411 | 20,000,000 | 13,688,253 |
| 29701 | 4,500,000 | 3,110,161 | 2,100,000 | 2,905,947 | 32,000,000 | 12,051,295 |
| 29901 | 3,500,000 | 2,000,615 | 1,200,000 | 2,273,248 | 13,000,000 | 5,014,160 |
| 30301 | 5,500,000 | 4,159,114 | 3,200,000 | 3,382,448 | 32,000,000 | 17,350,659 |

## 2.4 பொது வைப்புக் கணக்கு

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள இரண்டு திணைக்களங்களின் வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 68,489,696 ஆக இருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| அமைச்சு / திணைக்களம் | வைப்புக் கணக்கு இலக்கம் | 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி |
|---|---|---|
| | | ரூபா. |
| கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சு | 6000/0000/000/0015/0060/000 | 64,264,164 |
| கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் | 6000/0000/000/0015/0152/000 | 60 |
| புடவைக் கைத்தொழில் திணைக்களம் | 6000/0000/000/0015/0158/000 | 4,225,472 |
| மொத்தம் | | 68,489,696 |

## பகுதி 2

## ஒவ்வொரு தலைப்பிற்குரிய விபரமான அறிக்கை

### 1. தலைப்பு 149 – கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 08 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம்

என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்களிப்பு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக்கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புகள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம், கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இதன் (அ) முதல் (இ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 முதல் 1.5 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் என்பவற்றை தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதென அவதானிக்கப்பட்டுள்ளது.

### (அ) பாதீட்டு முரண்கள்

(i) 12 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 237,525,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிப்பாகவிருந்தது.

(ii) 27 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்பு அச் செலவின விடயங்களுக்கான தேறிய ஏற்பாட்டில் 25 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

**(ஆ) கட்டுநிதிக் கணக்குகள்**

------------------------------------------

(i) நிதிப் பிரமாணம் 371 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு மாறாக நிறைவேற்றுத்தரமில்லாத 04 உத்தியோகத்தர்களுக்கு 12 சந்தர்ப்பங்களின் போது ரூபா 218,000 கூட்டுத்தொகையான செயல் நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

(ii) நிதிப் பிரமாணம் 371 இன் படி, செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டதை உடனடுத்து பெற்றுக்கொள்ளப்பட்ட செயல் நிமித்த உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும் செயற்பாடு பூர்த்தியடைந்து 11 நாட்களுக்கும் 55 நாட்களுக்கும் இடையிலான காலதாமதத்தின் பின்னர் உப கட்டுநிதி தீர்க்கப்பட்டிருந்தது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

--------------------------------------------------------------------------------------------------------------

14901 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்குகள் தொடர்பான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத் திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 105,532 தொகையானதுடன் அந் நிலுவை மீதியை அறவிடுவதற்கு நிறுவனம் தவறியிருந்தது.

**1.4 செயலாற்றல்**

----------------------

2013 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், அமைச்சின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) போதிய நிதி மற்றும் பௌதீக முன்னேற்றத்தைக் காண்பிக்காத செயற்திட்டங்கள்

------------------------------------------------------------------------------------------------------------------------------

(i) உணவின் பேணல் தொடர்பான சான்றிதழை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் (Food Safety & hygiene certification programme) இற்காக 2013 ஆம் ஆண்டிற்காக ரூபா 4 மில்லியன் தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இதில் ரூபா 0.47 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் இது மேற்கொள்ளப்பட்ட ஏற்பாட்டின் 12 சதவீதமாகக் காணப்பட்டது. இவ்வாறே எய்தப்பட்டிருந்த பௌதீக முன்னேற்றம் எவ்வளவு என்பது குறித்து உறுதிப்படுத்திக்கொள்வதற்கு போதிய எழுத்து மூலத் தகவல்களும் பேணப்பட்டிருக்கவில்லை.

(ii) இறப்பர் சார்ந்த உற்பத்திக் கைத்தொழிலுக்காக 30 பேர் பயிற்றப்படுவதற்கு ரூபா 2 மில்லியன் தொகை செலவிடப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் பயிற்சிக்காக 15 பேர் மாத்திரமே தேர்ந்தெடுக்கப்பட்டு இதற்காக

ரூபா 0.26 மில்லியன் தொகை அதாவது எதிர்பார்க்கப்பட்ட தொகையில் 13 சதவீதம் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது.

(iii) பாதணிகள் மற்றும் பொருட்களின் உற்பத்திப் பயிற்சி நிறுவகம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 50 மில்லியன் தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இதில் ரூபா 14.15 மில்லியன் அதாவது மேற்கொள்ளப்பட்ட ஏற்பாட்டில் 28 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது. செலவிடப்பட்ட பெறுமதிக்குரிய பௌதீக முன்னேற்றம் முறைப்படி கண்காணிக்கப்பட்டமைக்கு கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படுவதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது.

(iv) தோற்கைத்தொழில் தொடர்பாக ரூபா 90 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இதில் ரூபா 2 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் படி 97 சதவீதத்திற்குரிய நிதியோ அல்லது பௌதீக செயலாற்றலோ எய்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எவ்வித செயல்முன்னேற்றமும் காண்பிக்கப்படாத செயற்திட்டங்கள்

---

(i) 2013 ஆம் ஆண்டின் போது தும்பு ஆய்வுகூடமும் இதற்கு உரித்தான உபகரணங்களிற்காக ரூபா 5 மில்லியன் தொகையும் அபிவிருத்திப் பிரிவு II இன் கீழ் அச்சீட்டுத் தொகுப்புத் தொழிலுக்காக ரூபா 5.26 மில்லியனுமாக ரூபா 10.26 மில்லியன் கூட்டுத்தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இதில் எவ்வித முன்னேற்றமும் எய்தப்பட்டிருக்கவில்லை.

“ தும்பு ஆய்வு கூடம் மற்றும் இதற்குரிய உபகரணங்கள்” செயற்திட்ட தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையினூடாக செயற்படுத்தப்படுவதனாலும் போதிய ஏற்பாடு கிடைக்கப்பெற்றிராமையால் அச்சீட்டுத் தொகுப்புச் செயற்திட்டமும் இடைநிறுத்தப்படுவதற்கு நேர்ந்தமை முகாமைத்துவத்தால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ii) உலோக உற்பத்தி மற்றும் இயந்திர உபகரணத் தொழிலுக்காக ரூபா 2 மில்லியன் தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. பொது நலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாடு நடாத்தப்பட்டமையால் இயந்திர உபகரணங்கள் வியாபார கண்காட்சி இரத்துச் செய்யப்பட்டமையால் இந்நிலை ஏற்பட்டிருந்தமை முகாமைத்துவத்தால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

## 1.5 மனிதவள முகாமைத்துவம்

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 55 | 38 | 17 |
| (ii) | மூன்றாம் நிலை | 12 | 08 | 04 |
| (iii) | இரண்டாம் நிலை | 1087 | 593 | 494 |
| (iv) | ஆரம்ப நிலை | 99 | 88 | 11 |
| | மொத்தம் | 1253 | 727 | 526 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 526 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

# 2 தலைப்பு 295 – வர்த்தகத் திணைக்களம்

## 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

வர்த்தகத் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஒக்டோபர் 27 ஆம் திகதி வர்த்தகப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின்

மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

**2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு இணக்க கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்களிப்பு உத்தியோகத்தரினதும், கணக்களிப்பு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமுறையில் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய வகையிலான உள்ளகக்கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2.3 கணக்காய்வு அவதானிப்பு**

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், வர்த்தகத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று இதன் (அ) முதல் (இ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.4 முதல் 2.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகளைத் தவிர்த்து, திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

**(அ) பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்பட்டிராமை**

2004 ஒக்டோபர் 11 ஆம் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 6.3 ஆம் பந்தியின் பிரகாரம் திணைக்களத்தால் அங்கத்துவக் கடன் பதிவேடு ஒன்று முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பாதீட்டு முரண்**

------------------------

06 செலவின விடயங்களுக்கான மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்பு அச் செலவின விடயங்களுக்கு உரித்தான தேறிய ஏற்பாட்டில் 24 சதவீதத்திற்கும் 95 சதவீதத்திற்கும் இடையிலான அளவைக் கொண்டிருந்தது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

---------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 29501 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம், அத்தினத்தில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 38,650 ஆனதுடன் அந் நிலுவை மீதி அறவிடுதல் தொடர்பாக திணைக்களம் தவறியிருந்தது.

(ii) வெளிநாட்டு தூதரகங்களுக்கு நியமிக்கப்பட்ட வர்த்தகத் திணைக்கள உத்தியோகத்தர்களின் ரூபா 2,472,334 கூட்டுத்தொகையான கடன் மீதி, கடன் வகையின் படி முற்பணக் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) இடர் கடன் பெற்றுக்கொள்வதற்காக உத்தியோகத்தர்களால் முன்வைக்கப்பட்டிருந்த விண்ணப்பங்கள் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது.

**2.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

----------------------------------------------------------

**2.4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத்திட்டம்**

------------------------------------------------------------

2013 ஆம் ஆண்டு தொடர்பாகத் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத்திட்டத்தின் செயற்பாடுகள் செயற்படுத்தப்படுகையில் பொறுப்புகளை ஏற்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பிலான விபரம் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே தேர்ந்தெடுக்கப்பட்ட உற்பத்தி மேம்பாடு, புதிய உற்பத்தி அறிமுகப்படுத்தல், ஏற்றுமதி மேம்பாட்டிற்காக வசதிகளைத் திட்டமிடல், சிறிய மற்றும் நடுத்தரஅளவிலான கைத்தொழிலாளர்களை ஊக்குவித்து இலங்கை உற்பத்திகளுக்கான சந்தையை உருவாக்குதல் போன்ற பிரிவுகள்

தொடர்பில் கவனம் செலுத்துவதாக செயல்நடவடிக்கைத்திட்டத்தில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இதற்கான திட்டமிடப்பட்ட இலக்கைக் காண்பித்திருக்கவில்லை.

### 2.4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆம் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு பூர்த்தியடைந்து 150 நாட்களுக்குள் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான ஒரு பிரதியுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கு உரிய செயலாற்றல் அறிக்கை 2014 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 தீர்க்கப்படாத பொறுப்புகள்

திணைக்களத்தால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத 1 ஆண்டிற்குக் குறைவான பொறுப்புகள் ரூபா 1,993,183 ஆகக் காணப்பட்டது.

## 2.6 செயலாற்றல்

2013 வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம், திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

### (அ) ஏற்றுமதி மேம்பாடு

நாட்டின் ஏற்றுமதி மேம்பாட்டு வர்த்தகத் திணைக்களத்தின் பிரதான மேம்பாட்டுச் செயற்பாடுகளாவதுடன் 2013 ஆம் ஆண்டில் நாட்டின் ஒட்டுமொத்த ஏற்றுமதிப் பெறுமதி 2012 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக ஐ.அ டொலர் மில்லியன் 9,180 முதல் ஐ.அ டொலர் மில்லியன் 10,009 வரை அதிகரித்திருந்தது. 2011 ஆம் ஆண்டின் போது அதன் பெறுமதி ஐ.அ டொலர் மில்லியன் 10,017 இற்கு ஒப்பாகக் குறைவடைந்திருந்தது. இதன் படி, இலங்கையின் ஏற்றுமதி வருமானம் தொடர்ந்து அதிகரிக்கும் செயற்பாட்டு நடவடிக்கையின் தேவைப்பாடு கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### (ஆ) கடன்வழங்கும் நிறுவனத்தை அங்கீகரித்தல்

1949 இன் 06 ஆம் இலக்க அடகு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் 1947 இன் 12 ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்பு கட்டளைச்சட்டம் மற்றும் 1990 இன்

14 ஆம் இலக்க உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்பு பற்றுச்சீட்டு அதிகாரச்சட்டத்தின் கீழ் வணிகப் பணிப்பாளர் நாயகத்திற்கு

(i) கடன்வழங்கும் நிறுவனத்தை அங்கீகரித்து பதிவு செய்தல்

(ii) அங்கீகரிக்கப்பட்ட கடன்வழங்கும் நிறுவகங்களின் செயற்பாடுகள் மீதான கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளல் ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும், மேற்குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திணைக்களத்தால் 2013 திசெம்பர் 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) தங்குமிட வீசா அனுமதிப்பத்திர பரிந்துரை வழங்குதல்**

---

2013 ஆம் ஆண்டின் போது வர்த்தகத் திணைக்களத்தால் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வெளிநாட்டவர்களுக்காக தங்குமிட வீசா அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு 206 அதிகாரமுள்ள நிறுவனங்கள் பரிந்துரைக்கப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், இப் பரிந்துரை வழங்கப்படுகையில் வெளிநாட்டவர்கள் இலங்கையில் சட்டரீதியான வியாபார நடவடிக்கைகளில் உண்மையாகவே ஈடுபடுகின்றனரா என்பது குறித்து உறுதிப்படுத்திக் கொள்ளும் முறைமை திணைக்களத்தில் இருக்கவில்லை.

**2.7 மனிதவள முகாமைத்துவம்**

---

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்**

---

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 54 | 51 | 03 |
| மூன்றாம் நிலை | 02 | 01 | 01 |
| இரண்டாம் நிலை | 64 | 47 | 17 |
| ஆரம்ப நிலை | 19 | 12 | 07 |
| மொத்தம் | 139 | 111 | 28 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் 28 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) வெற்றிடங்கள் நிலவும் பதவிகளில் ஒரு வர்த்தகப் பணிப்பாளர் பதவியும், உதவி வர்த்தகப் பணிப்பாளர் பதவிகள் இரண்டும் வர்த்தக ஆராய்ச்சி உதவியாளர் பதவிகள் நான்கும் காணப்பட்டன. சிரேஷ்ட நிலையிலான உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் திணைக்களத்தில் இருக்கையில், திணைக்களத்திலிருந்து சம்பளம் பெறும் பிரதி மற்றும் உதவிப் பணிப்பாளர் பதவிகளை வகிக்கும் இரு உத்தியோகத்தர்கள் அமைச்சின் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(இ) முறைமைப் பகுப்பாய்வாளர் மற்றும் மொழிபெயர்ப்பாளர் எனும் மூன்றாம் நிலைப் பதவிகள் 02 உம் ஏற்படுத்தப்பட்ட நாள் முதல் வெற்றிடமான நிலையில் காணப்பட்டதுடன் நூலகர் பதவியும் 15 ஆண்டு காலமாக வெற்றிடமாக உள்ளமை கண்டறியப்பட்டது.

## 3. தலைப்பு 297 – கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்

### 3.1 கணக்காய்வின் நோக்கெல்லை

கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 11 ஆம் திகதி கம்பனிகள் பதிவாளருக்கு (கடமை நிறைவேற்றல்) வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு

இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**3.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**3.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும், வருமானக் கணக்கும், இணக்கக் கூற்றும் இங்கே (அ) முதல் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 3.4 தொடக்கம் 3.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

(அ) பாதீட்டு முரண்

சம்பளம் மற்றும் வேதன செலவின விடயத்திற்காக மிகை ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ரூபா 2,171,137 ஆக இருந்தது. அது அந்த செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 22 சதவீதமாக இருந்தது.

(ஆ) வருமானக் கணக்குகள்

2 வருமானக் குறியீடுகளுக்குரிய வருமானக் கணக்குகள் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வருமானக் குறியீடு 20.03.02.10 இன் கீழ் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் படி ரூபா 70,000,000 தொகையான வருமானத்தை சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அந்த வருமான மதிப்பீடு ரூபா 100,000,000 ஆக திருத்தப்பட்டிருந்தது. அதன் படி மீளாய்வாண்டின் போது அந்த திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு ரூபா 34,005,630 இனால் அதாவது திருத்தப்பட்ட மதிப்பீடு 34 சதவீதத்தால் அதிகரித்து ரூபா 134,005,630 தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ii) அவ்வாறே வருமானக் குறியீடு 20.03.02.12 இன் கீழ் மீளாய்வாண்டின் போது ரூபா 5,000,000 தொகையான வருமானமொன்றை சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், உள்ளபடியான வருமானம் ரூபா 6,474,000 ஆக இருந்தது. அதன் படி மதிப்பீட்டு வருமானம் ரூபா 1,474,000 தொகை அதாவது 29 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

---

29701 ஆம் விடய இலக்க அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணம் தொடர்பான 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றை பரிசீலனை செய்த போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 120,741 ஆக இருந்ததுடன், அந்நிலுவை மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டதுடன், 11 வருடங்களுக்கும் 30 வருடங்களுக்கும் இடையிலான நீண்ட காலம் முதல் அந்நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ii) 2005 ஆம் ஆண்டின் போது ஓய்வு பெற்ற மற்றும் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து முறையே ரூபா 72,260 மற்றும் ரூபா 17,000 தொகையான கடன் மீதிகள் அறவிட வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தால் அது தொடர்பாக போதியளவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியின் படி, திணைக்களத்தால் கடன் பதிவேடு மற்றும் ஏடுகள் முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

**3.4 நல்லாளுகையும் கணக்களிப்பாறுப்பும்**

**வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் செயற்பாடுகள் விரிவாகவும் அமுல்படுத்தும் பொறுப்பை வகிக்கின்றவர்கள் தொடர்பான விபரங்களுக்கும் உரிய செயற்பாடுகளை நிறைவேற்றும் காலப்பகுதிகளும் குறிப்பாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

திணைக்களத்திற்குச் சொந்தமான மூன்று வாகனங்கள் காணப்பட்ட போதிலும் அதற்காக இரண்டு சாரதிகள் மாத்திரம் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அதனால் நீண்ட காலமாக வாகனமொன்று குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே, திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 03 சாரதிகள் காணப்பட்ட போதிலும் அதில் ஒரு பதவி நீண்ட காலமாக வெற்றிடமாக காணப்பட்டது.

(ஆ) கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்

திணைக்களக் கட்டிடம் அமைந்துள்ள காணி, போக்குவரத்து அமைச்சின் இணக்கப்பாட்டுடன் உள்ள கம்பனிப் பதிவாளர் நாயகத்திற்கு கையளிப்பதற்காக 2007 செப்தெம்பர் 12 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. இதன் படி திணைக்களத்தால் இதற்காக 2012 யூன் 26 ஆந் திகதி ரூபா 35,510,750 தொகை புகையிரதத் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. இருந்த போதிலும் 2013

திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இந்தக் காணி திணைக்கத்திற்குக் கையேற்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயற்படாமை**

**மீளமைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம்**

கம்பனிகளைப் பதிவு செய்யும் பணிகளை கணனிமயப்படுத்தும் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 140 மில்லியன் ஏற்பாடு ஒதுக்கப்பட்ட போதிலும் செயற்திட்டம் அமுல்படுத்தப்படாமையால் ஒதுக்கப்பட்ட மொத்த ஏற்பாடும் குறைப்பயன்பாடுடையதாகியிருந்தது. அதற்கு மேலாக நிருவாகச் செலவினத்திற்காக மேலும் ரூபா 2,800,000 தொகையான மேலதிக ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1,086,000 தொகை கணனி மற்றும் அதற்குரிய மென்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

**3.7 செயலாற்றல்**

திணைக்களத்தின் செயலாற்றல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) கம்பனி மற்றும் ஏனையவைகளைப் பதிவு செய்தல்**

திணைக்களத்தின் பௌதீக செயலாற்றலை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது பின்வரும் முறையில் குறைவடைந்திருந்தது.

| | எண்ணிக்கை | | வேறுபாடுகளின் குறைவு | குறைவின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | 2013 | 2012 | | |
| பதிவுசெய்யப்பட்ட கம்பனிகள் | 6,047 | 7,089 | (1,042) | (15) |
| கோவைகளைப் பரீட்சித்தல் | 10,847 | 12,729 | (1,882) | (15) |
| பெயரை அங்கீகரித்தல் | 12,075 | 14,194 | (2,119) | (15) |
| சான்றுப்படுத்திய பிரதிகள் | 36,531 | 38,459 | (1,928) | (5) |
| மாதிரிப் பத்திரங்களைப் பதிவுசெய்தல் | 70,659 | 74,304 | (3,645) | (5) |
| ஆண்டறிக்கைகளைப் பதிவுசெய்தல் | 29,853 | 33,845 | (3,992) | (12) |
| நிதி அறிக்கைகளைப் பதிவுசெய்தல் | 2,867 | 2,959 | (92) | (3) |

| | | | | |
|---|---|---|---|---|
| மாதிரிப் பத்திர விற்பனை | 4,207 | 4,368 | (161) | (4) |
| செயலாளர்களைப் பதிவுசெய்தல் | 437 | 622 | (185) | (30) |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் போது ஆண்டறிக்கை பதிவு செய்தல், 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 3,992 இனால் அதாவது 12 சதவீதத்தால் குறைவடைந்திருந்த போதிலும், வருமானம் ரூபா 29 மில்லியன் முதல் ரூபா 149 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. அவ்வாறே ஏனைய சகல பிரிவுகளினதும் செயலாற்றலில் செயல்முன்னேற்றம் குறைவடைந்திருந்த போதிலும் வருமானம் அதிகரித்திருந்தது. இதற்காக மீளாய்வாண்டின் கட்டணம் அதிகரிக்கப்பட்டமை பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

(ii) 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 62,508 கம்பனிகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. அதில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஆண்டறிக்கைகளை கோவையிடப்படக்கூடிய 52,990 கம்பனிகளின் எண்ணிக்கையில், 38,906 கம்பனிகள் ஆண்டறிக்கைகளை சமர்ப்பித்திருக்கவில்லை. அதன் படி 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 64,843,333 தொகையான வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ஆண்டறிக்கை கோவையிடப்படாத கம்பனிகளிடமிருந்து ஆண்டறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் திணைக்களத்தால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) போதியளவில் நிறைவேற்றப்படாத பணிகள்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தை அமுல்படுத்துதல்

கம்பனிகள் பதிவாளர் நாயகத்திற்கு கம்பனிச் சட்டத்தினால் கையளிக்கப்பட்ட நியதிச் சட்ட செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல் திணைக்களத்தால் நிறைவேற்ற வேண்டிய பணியாகும். திணைக்களத்தால் அதனை நிறைவேற்றுவதற்காக செயல்நடவடிக்கை வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அது

தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

* வரையறுக்கப்பட்ட கம்பனிகள் தாபிக்கப்பட்டு 30 தினங்களுக்குள் கம்பனியின் பெயர், இலக்கம், பதிவு செய்த அலுவலகம், முகவரி உரியவாறு குறிப்பிடப்பட்டு கம்பனி உருவாக்கப்பட்டமை தொடர்பாக பகிரங்க அறிவித்தலொன்று பிரசுரிக்கப்பட வேண்டும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காத வரையறுக்கப்பட்ட கம்பனிகள் தொடர்பாக திணைக்களத்தால் 2007 இன் 4 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9(1) பிரிவின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

* வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் ஆரம்ப பங்கு வழங்கல் தொடர்பாக கம்பனிப் பதிவாளர் அறிவிக்காமை மற்றும் அவ்வாறான வரையறுக்கப்பட்ட கம்பனிகள் தொடர்பாக கம்பனிச் சட்டத்தின் 51 ஆவது பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

* நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்காத வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகள் அல்லாத வரையறுக்கப்பட்ட கம்பனிகள் தொடர்பாக அதிகாரச்சட்டத்தின் 170(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

* கம்பனிகளின் பெயர்களை மாற்றுதல் தொடர்பாக கம்பனிச் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத வரையறுக்கப்பட்ட கம்பனிகள் தொடர்பாக திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

* ஆண்டறிக்கை சமர்ப்பிக்காத வரையறுக்கப்பட்ட கம்பனிகள் தொடர்பாக கம்பனிச் சட்டத்தின் 131(4) ஆம் பிரிவின் பிரகாரம் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிராததுடன் அவைகளின் பெயரை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

* செயற்படாத வரையறுக்கப்பட்ட கம்பனிகள் கணிசமான அளவில் காணப்பட்டன.

* முன்னைய ஆண்டுகளில் ஆண்டறிக்கைக்காக கோவையிடப்பட்டிராததுடன் அதற்குப் பின்னரான வருடங்களில் ஆண்டறிக்கை கோவையிடப்பட்டிருந்தது.
* 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 102(1) ஆம் பிரிவின் படி இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட கம்பனியால் ஏற்படுத்தப்பட்ட மறைப் பொறுப்புக்கள் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் செயற்பாடுகளில் பாரியளவில் தாமதம் காணப்பட்டது.

(ii) 1935 இன் 61 ஆம் இலக்க சீட்டு கட்டளைச் சட்டம்

--------------------------------------------------------------------------------

சீட்டு பதிவு செய்தல் மற்றும் ஒழுங்கமைத்தல் செயற்பொறுப்பு கம்பனிப் பதிவாளர் அலுவலகத்திற்குச் கையளிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது இதன் கீழ் எதுவித செயற்பாடுகளும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக விசாரணை செய்த போது அதற்குப் பதிலாக இந்த அதிகாரச் சட்டம் தற்போது செயற்பாடற்ற நிலையிலுள்ளதாக திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(iii) சங்க கட்டளைச் சட்டம்

---------------------------------------

மீளாய்வாண்டின் போது சங்க கட்டளைச் சட்டத்தின் கீழ் 169 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் சங்கங்களைப் பதிவு செய்தலால் கிடைத்த முத்திரை வருமானம் ரூபா 4,225 ஆக இருந்தது. 2010 ஆம் ஆண்டிற்கும் 2013 ஆம் ஆண்டிற்குமிடையேயான காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கையில் தொடர்ச்சியான குறைவொன்று அவதானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது அது 75 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது.

(iv) பொது ஒப்பந்தங்களை பதிவு செய்தல்

-----------------------------------------------------------------

1987 இன் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்களைப் பதிவு செய்தல் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் படி ரூபா 5 மில்லியனை விஞ்சுகின்ற சகல ஒப்பந்தங்களும் கம்பனிப் பதிவாளரின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது திணைக்களத்தால் 4,251 பொது ஒப்பந்தங்கள் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், 2012 இன் போது அது 4,414 ஆக இருந்தது. 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அதில் 4 சதவீத வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது.

(v) கணக்காய்வாளர்களைப் பதிவு செய்தலும் பதிவினைப் புதுப்பித்தலும்

---

மீளாய்வாண்டின் போது 74 புதிய கணக்காய்வாளர்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் கிடைத்த வருமானம் ரூபா 9,900 ஆகும். முன்னைய ஆண்டின் போது புதிதாக பதிவு செய்யப்பட்ட 84 கணக்காய்வாளரிடமிருந்தும் கிடைத்த வருமானம் ரூபா 11,340 ஆனமையால் பெறப்பட்ட வருமானம் 12 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டின் போது கணக்காய்வாளரின் பதிவினைப் புதுப்பித்தல் 556 ஆக இருந்ததுடன் வருமானம் ரூபா 12,232 ஆகும். அது முன்னைய ஆண்டின் போது 444 பேராக இருந்ததுடன் வருமானம் ரூபா 9,768 ஆனமையால் வருமானம் 25 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மேலும் கணக்காய்வாளர்களை வழிநடாத்துதல் மற்றும் அறிவுறுத்தல் தொடர்பாக எவ்வித வேலைத் திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

---

2007 இன் 1 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பணிகளையும் நோக்கங்களையும் நிறைவேற்றும் போது கம்பனிப் பதிவாளரால் மேற்கொள்ளப்பட்ட சகல செலவினமும் நிதியத்திலிருந்து செலவிடப்பட முடியுமான போதிலும், அச் செலவினங்களில் எடுக்கப்படாது தனியார் கம்பனிக்குரிய பங்குகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 90,275,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. இந்த பங்குகளின் உரித்து கூட்டுறவு, உள்நாட்டு வாணிப அமைச்சிற்கு உரித்தாகியிருந்ததுடன் உரிய கம்பனி நட்டமடைந்தமையால் அதனைக் கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. மேலும், இந்த முதலீட்டிலிருந்து எவ்வித பிரதிபலனும் திணைக்களத்திற்கு 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கிடைதிருக்கவில்லை.

### 3.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

வெற்றிடம் ஏற்பட்டுள்ள கம்பனிப் பதிவாளர் நாயகம் பதவிக்காக தகுதியான உத்தியோகத்தரொருவரை சேர்ப்பதற்காக 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை பல சந்தர்ப்பங்களின் போது விண்ணப்பங்கள் கோரப்பட்டு அதற்கான அறிவித்தல்களுக்காக ரூபா 330,870 தொகை செலவிடப்பட்டிருந்தது. அப் பதவிக்காக தகுதியான உத்தியோகத்தரொருவர் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஆட்சேர்க்கப்படாமையால் உரிய செலவினம் பயனற்றதாகியிருந்தது.

## 3.10 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கம்பனி நிதியத்தின் வங்கிக் கணக்கில் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 13 மில்லியன் சராசரியாக மாதாந்த காசு மீதியொன்று மிகையாகக் காணப்பட்டதுடன், அப்பணம் வினைத்திறனாக முதலீடு செய்யப்படாமையால் பெறக்கூடியதாக இருந்த வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ii) 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்தும் போது திணைக்களத்தின் ஆவணக் காப்பகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பிரதான பணிகள் மனித வளப் பற்றாக்குறைவினால் முறையான பிரகாரம் பேணிச் செல்ல முடியாதிருந்தது.

(iii) தற்போது திணைக்களத்தால் தனிப்பட்ட பங்குதாரர்களுக்காக வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியில் பதிவு செய்யப்பட்ட போதும் கம்பனிச் சட்டத்தில் அது தொடர்பில் விளக்கமாகக் காண்பிக்கப்படாமையால் கம்பனிச் சட்டத்தின் உரிய பிரிவு திருத்தப்பட வேண்டிய போதிலும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கம்பனிச் சட்டத்தை திருத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.11 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 09 | 06 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 71 | 48 | 23 |
| (iv) | ஆரம்ப நிலை | 24 | 19 | 05 |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | - | - |
| | மொத்தம் | 107 | 75 | 32 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்தின் கம்பனிப் பதிவாளர் நாயகம் பதவி மற்றும் கம்பனிப் பதிவாளர் பதவி என்ற இரண்டு பதவிக்காகவும் கடமைகளை நிறைவேற்றுவதற்கு மாத்திரம் இரண்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ii) அவ்வாறே தொழில் முயற்சி பகுப்பாய்வு உதவியாளர்களில் அங்கீகரிக்கப்பட்ட 8 பதவிகளும் அரச முகாமைத்துவ உதவியாளர்களில் 10 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டன.

(iii) திணைக்களத்தில் 4 கம்பனிப் பரீட்சகர் பதவிகளில் 3 பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டது. அதன் பிரகாரம் பதவி வெற்றிடத்திற்காக உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு உயர் முகாமையினால் போதியளவான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் இந்த நிலைமை 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்துவதற்காக பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

## 4. தலைப்பு 299 - இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம்

### 4.1 கணக்காய்வின் நோக்கெல்லை

இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 செப்தெம்பர் 04 ஆந் திகதி புலமைச் சொத்துக்கள் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில்

விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**4.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**4.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) மற்றும் (ஆ) இல் காண்பிக்கப்பட்ட பொது அவதானிப்புக்கள் மற்றும் 4.4 இலிருந்து 4.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு காண்புகளைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்**

02 செலவின விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது அச் செலவின விடயங்களிற்குரிய தேறிய ஏற்பாட்டின் 30 சதவீதத்திற்கும் 43 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

29901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 139,410 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந் நிலுவையினை அறவிடுதற்கு அலுவலகம் தவறியிருந்தது.

**4.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**உள்ளகக் கணக்காய்வு**

அலுவலகத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்படாதிருந்ததுடன், அந்த நடவடிக்கைகள் கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அப் பிரிவு போதியளவு உள்ளகக் கணக்காய்வை மேற்கொண்டிருக்காததுடன் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிற்காக ஒரு கணக்காய்வு ஐயவினா வீதம் வழங்கப்பட்டிருந்தது.

**4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் கையாளல்**

புலமைச் சொத்துக்கள் சார்ந்த உரிமைகளை மேம்படுத்துவதற்கான வசதிகளை வழங்குவதற்காக 2007 செப்தெம்பர் 25 ஆந் திகதிய ரீ.எம்.டீ.சீ./2007/25 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் இலங்கை தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்திற்காக பாதுகாப்பறை, விற்பனை மேம்படுத்தல் நிலையம் மற்றும் பயிற்சி நிலையம் என்பவற்றை நிர்மாணிப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்காக 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் ரூபா 22,978,101 செலவிடப்பட்டிருந்ததுடன் 2011 சனவரி 31 ஆந் திகதிய அமைவிஞ்/11/037/503/013 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் படி அக்காணி சுற்றுலா கைத்தொழில் சார்ந்த நடவடிக்கைகளிற்காக கையேற்கப்பட உள்ளதாகவும் அதற்காக வேறோர் இடத்தை இனங்காணுமாறும் அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய அந்த நிர்மாண நடவடிக்கைகள் 2010 மார்ச் 31 ஆந் திகதி இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் வேறோர் இடத்தை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்திற்கு சொந்தமான காணியில் அமைந்துள்ள இக்கட்டிட காணியின் உரித்தினையும் நிலைத்திருத்தல் தன்மையினையும் உறுதிப்படுத்திக் கொள்ளாது குறித்த நிர்மாண நடவடிக்கைகளிற்காக மேற்படி பணம் செலவிடப்பட்டிருந்தது. இக் காணிக்கு சதொச நிறுவனத்தினால் அதற்குரிய உரித்துச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையின் காரணமாக நிறுவனத்தினால் செலவிடப்பட்டிருந்த ரூபா 22,978,101 தொகை பயனற்றதாகியிருந்தது. தற்போது கட்டிடத்தை கழிவுப் பெறுமதியில் விற்பனை செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

**4.6 செயலாற்றல்**

மீளாய்வாண்டில் வியாபாரக் குறிகள், பேடன்ட் அனுமதிப்பத்திரங்கள் மற்றும் கைத்தொழில் திட்டங்களை பதிவுசெய்தல் தொடர்பிலான செயலாற்றல் தகவல்கள் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| | வியாபாரக் குறிகளைப் பதிவுசெய்தல் | பேடன்ட் அனுமதிப்பத்திரங் களை பதிவுசெய்தல் | கைத்தொழில் திட்டங்களை பதிவுசெய்தல் |
|---|---|---|---|
| முன்னைய ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 28,720 | 1,525 | 963 |
| ஆண்டில் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 8,825 | 516 | 346 |
| ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்ட எண்ணிக்கை | 37,545 | 2,041 | 1,309 |
| ஆண்டின் போது பதிவுசெய்யப்பட்ட எண்ணிக்கை | 1,485 | 236 | 130 |
| எதிர்வரும் ஆண்டுக்கு முன்கொண்டு செல்லப்பட்ட பதிவுசெய்யப்படாத எண்ணிக்கை | 36,060 | 1,805 | 1,179 |
| செய்யப்பட்டு வருகின்ற கோவைகளின் எண்ணிக்கை | 16,400 | 1,730 | 729 |
| எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாத கோவைகள் | 19,660 | 75 | 450 |
| எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாத விண்ணப்பங்களின் சதவீதம் | 52 | 4 | 35 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் வியாபாரக் குறிகளை பதிவுசெய்வதற்காக கிடைத்திருந்த மொத்த விண்ணப்பங்களில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாதிருந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 19,660 ஆக காணப்பட்டதுடன், அவை ஆண்டின் போது பதிவுசெய்யப்படுவதற்காக கிடைத்திருந்த 37,545 ஆன மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கையில் 52 சதவீதமாக காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் பதிவுசெய்வதற்காக கிடைத்திருந்த 2,041 மொத்த பேடன்ட் அனுமதிப்பத்திரங்களில் 236 விண்ணப்பங்கள் பதிவுசெய்யப்பட்டிருந்ததுடன் செய்யப்பட்டு வருகின்றவைகளின் எண்ணிக்கை 1,730 ஆகக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு எவ்வித நடவடிக்கைகளும்

எடுக்கப்படாதிருந்த கோவைகளின் எண்ணிக்கை 75 ஆக காணப்பட்டதுடன், அவை 4 சதவீதமாக காணப்பட்டன.

(இ) முன்னைய ஆண்டுகளிலிருந்து முன்கொண்டுவரப்பட்டிருந்த 963 கைத்தொழில் திட்ட விண்ணப்பங்கள் மற்றும் ஆண்டில் கிடைக்கப்பெற்றிருந்த 346 விண்ணப்பங்கள் என்ற வகையில் மொத்தமாக 1,309 விண்ணப்பங்கள் மீளாய்வாண்டில் பதிவுசெய்தலுக்காக காணப்பட்டதுடன், அவற்றில் 130 விண்ணப்பங்கள் பதிவுசெய்யப்பட்டிருந்ததுடன் அது மொத்த எண்ணிக்கையில் 10 சதவீதம் மாத்திரமாகும். பகுதியளவில் பூர்த்திசெய்யப்பட்ட எண்ணிக்கை 729 ஆக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாதிருந்த 450 கைத்தொழில் திட்ட விண்ணப்பங்கள் மீளாய்வாண்டின் இறுதியில் எஞ்சியிருந்தன.

(ஈ) வியாபாரக் குறிகள், பேடன்ட் அனுமதிப்பத்திரங்கள் மற்றும் கைத்தொழில் திட்டங்களை பதிவுசெய்தல் இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் பிரதான பணியான போதிலும், அப் பணியினை நிறைவேற்றுகையில் மேற்குறிப்பிட்டவாறு தாமதங்கள் ஏற்பட்டிருந்தமையால் புதிய புத்தாக்குனர்கள் ஆர்வமிழத்தல் மற்றும் புத்தாக்குனர்களின் புதிய ஆக்கங்களின் ஊடாக பொருளாதாரத்துக்குக் கிடைக்கக்கூடிய பங்களிப்பு கிடைக்காதிருக்கும் என்பது அவதானிக்கப்பட்டது. தாமதமடைந்த மேற்குறிப்பிடப்பட்ட விண்ணப்பங்களை துரிதமாக பதிவுசெய்வதற்கு 2013 மே மாதம் முதல் துண்டுக்கூலி அடிப்படை கொடுப்பனவு முறை அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 305,960 மேலதிக செலவினம் நிதியத்திலிருந்து செய்யப்பட்டிருந்தது.

## 4.7 போதியளவில் அடையப்படாத பணிகள்

**வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்கிய விதத்தில் செயற்பட்டிருக்காமை**

தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் இணங்காதிருந்த சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் புலமைச் சொத்துக்கள் வசதிகளை வழங்கும் 3 நிலையங்களை தாபிப்பதற்காக ரூபா 500,000 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2013 திசெம்பர் 31 வரை எந்தவொரு நிலையமும் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 1.52 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டு சிறாப்பரின் பணிப்பொறுப்புக்களை கணனி மயப்படுத்துவதற்கும் உள்ளக மின்னஞ்சல் முறையை அறிமுகப்படுத்தவதற்கும் திட்டமிட்டிருந்த போதிலும், 2013 திசெம்பர் 31 வரை அக்குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு தவறியிருந்தது. இதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதியேற்பாட்டிலிருந்து ரூபா 1.125 மில்லியன் செலவிடப்பட்டு கணனி பாகங்கள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## 4.8 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 07 | 03 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 03 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 43 | 24 | 19 |
| (iv) | ஆரம்ப நிலை | 11 | 10 | 01 |
| | மொத்தம் | 64 | 40 | 24 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) புலமைச் சொத்து அலுவலகத்தின் பிரதான பதவியான புலமைச் சொத்துக்கள் பணிப்பாளர் நாயகம் பதவி 01 ஆண்டும் 03 மாதங்களுமாக வெற்றிடமாகக் காணப்பட்டு வருவதுடன் அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காது பதிற்கடமை அடிப்படையில் உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தார். உயர் முகாமைத்துவ மட்டத்திலுள்ள பதவியான 02 பிரதிப் பணிப்பாளர் பதவிகள் 4 ½ ஆண்டு காலமாகவும் உதவிப் பணிப்பாளர் பதிவியொன்று 2 ½ ஆண்டு காலமாகவும் வெற்றிடங்களாகக் காணப்பட்டன.

(ii) நிதியத்திற்குரிய விசேடமான பதவிகளில், புலமைச் சொத்துக்கள் தொழில்நுட்ப உதவியாளர், புலமைச் சொத்துக்கள் ஆராய்ச்சி உதவியாளர், ஆவணமாக்கல் மற்றும் தரவு உதவியாளர்,

புலமைச் சொத்துக்கள் உத்தியோகத்தர் போன்ற 12 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன.

(iii) 06 அரச முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் 2 ஆண்டு காலமாக வெற்றிடமாகக் காணப்பட்டன.

## 5. தலைப்பு 303 – புடவைக் கைத்தொழில் திணைக்களம்

---

### 5.1 கணக்காய்வின் நோக்கெல்லை

புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 11 ஆந் திகதி புடவைக் கைத்தொழில் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 5.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக்

கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 5.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையில் (அ) தொடக்கம் (இ) வரையிலுள்ள பொது அவதானிப்புகள் மற்றும் 5.4 இலிருந்து 5.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 07 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையின் காரணமாக அந்த ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ஒதுக்கப்பட்ட ஏற்பாட்டில் 12 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

(ii) 07 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர், சேமிப்பினை விஞ்சி ரூபா 1,133,035 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

### (ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 30301 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்குகள் தொடர்பான 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம், அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 637,231 ஆக இருந்ததுடன் அந்நிலுவை மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ii) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் கீழ் ஆதனக் கடன் பெற்ற ஒரு உத்தியோகத்தர் 2003 ஆம் ஆண்டின் போது மரணமடைந்ததுடன் அது வரையிலும் அறவிட வேண்டியிருந்த

கடன் மீதி ரூபா 108,465 ஆக இருந்தது. அந்தக் கடன் பணம் வழங்கப்பட்டு 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்தக் கடனை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. அந்த ஆதனக் கடனை செலுத்தும் போது அட்டோனி அதிகாரம் பதிவு செய்யப்படாதிருந்ததுடன் உரிய காணியின் உரித்துறுதியும் திணைக்களத்தின் பொறுப்பில் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஓய்வு பெற்ற உத்தியோகத்தரிடமிருந்து 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அறவிட வேண்டிய கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 528,766 ஆக இருந்தது. அந்தக் கடன் மீதியில் உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்றுச் சென்று 2 வருடங்களை விஞ்சிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 240,545 ஆக இருந்தது.

(iv) மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகையை கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதியுடன் இணக்கஞ் செய்த போது ரூபா 195,525 தொகையான வேறுபாடு வெளிப்படுத்தப்பட்டது.

**(இ) கலைத்தல் முற்பணக் கணக்கு**

கலைத்தல் கணக்கிற்குரிய அங்கீகரிக்கப்படாத திரண்ட செயற்பாட்டு நட்டம் ரூபா 8,236,453 கூட்டுத்தொகையாக இருந்ததுடன் அதனைப் பதிவழிப்பதற்கு 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

**உள்ளகக் கணக்காய்வு**

திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்படாதிருந்ததுடன் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதன் மூலம் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5.5 செயற்திட்டங்களை அமுலப்படுத்துவதில் நலிவுகள்

### செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல்

திணைக்களத்திற்குச் சொந்தமான நுவரெலியா புடவைக் கைத்தொழில் பயிற்சிப் பாடசாலையின் கட்டிடத்தில் செயற்திட்ட அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,500,000 கூட்டுத்தொகையான ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த மொத்த ஏற்பாடும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.6 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) புடவைக் கைத்தொழில் பாடசாலைக்காக மாணவர்களைச் சேர்த்தல்

நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் அமைக்கப்பட்டுள்ள புடவைக் கைத்தொழில் பாடசாலைகளிலிருந்து வருடாந்தம் இலவசமாக செயற்படுத்தப்படுகின்ற இரண்டு பாடநெறிகளின் மூலம் கைஇயந்திரப் புடவைக் கைத்தொழில் தொடர்பாக முழுமையான அறிவு மற்றும் பயிற்சியினை வழங்கி புடவைக் கைத்தொழிலுக்குத் தேவையான முகாமையாளர்கள், ஆலோசனையாளர்கள் மற்றும் முயற்சியாளர்களை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டிருந்தது. புடவைக் கைத்தொழில் தொடர்பாக அடிப்படை அறிவினை வழங்கும் வகையில் மாதாந்த அடிப்படைக் கற்கைக்காக எந்த மாணவரும் மீளாய்வாண்டின் போது உள்ளீர்க்கப்பட்டிராததுடன் இறுதிச் சான்றிதழ்பத்திர ஒரு வருட பாடநெறிக்காக 200 மாணவர்களை சேர்ப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 142 மாணவர்கள் மாத்திரம் சேர்க்கப்பட்டிருந்தனர்.

### (ஆ) அலங்கார பயிற்சிப் பாடசாலைக்காக மாணவர்களைச் சேர்த்தல்

உள்நாட்டு விழுமியங்கள் மற்றும் கலாசாரங்களுக்குப் பொருத்தமான வகையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளின் செயற்படு தன்மையினை வெற்றிபெறச் செய்வதற்கான வகையில் கைஇயந்திர கைப்பணிப் பகுதிகளில் நிர்மாண வடிவமைப்பு மற்றும் போட்டியாளர் ஆடை உற்பத்திக்காக உற்பத்தியாளர்களை ஈடுபடுத்துதல் திணைக்களத்தின் பிரதான நோக்கமாகும். அந்த நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு அலங்கார வடிவமைப்பாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக ஒரு வருட வதிவிட பயிற்சி பாடநெறி கெட்டம்பே மற்றும் கட்டுபெத்த அலங்கார பயிற்சி பாடசாலையின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2012/2013

கல்வியாண்டிற்காக 50 மாணவர்கள் படி இரண்டு பாடசாலைகளிற்காக 100 மாணவர்களை சேர்ப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் கெட்டம்பே மற்றும் கட்டுபெத்த அலங்காரப் பயிற்சி நிலையத்திற்காக முறையே 13 மற்றும் 11 மாணவர்களாக 24 கூட்டுத்தொகையான மாணவர்கள் மாத்திரம் உள்ளீர்க்கப்பட்டிருந்தனர். இது தொடர்பாக முகாமைத்துவம் விஷேட கவனம் செலுத்த வேண்டியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 5.7 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள காணி

வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள காணி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது உரிய காணி தொடர்பாக 1995 யூலை 21 ஆந் திகதிய எஸ்ஈஜ/ஏ/4/34 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் பின்வரும் காணிகளிலிருந்து அறவிட வேண்டியிருந்த ரூபா 19,893,884 தொகையான நிலுவையாக இருந்த வாடகைப் பணம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

| தொழில் முயற்சி / காணி | அறவிடப்படாத வாடகைப் பணம் |
|---|---:|
| தெல்தெனிய | 2,522,000 |
| களுத்துறை | 1,991,962 |
| பேருவளை | 2,151,319 |
| தலவத்து ஓயா | 4,368,000 |
| யட்டிநுவர | 312,795 |
| குறுவிட்ட | 5,491,690 |
| பிபில | 1,681,250 |
| ஹிங்குரக்கொடை | 529,600 |
| பண்டாரவெல | 845,268 |
| மொத்தம் | 19,893,884 |

**(ஆ) செயற்பாடற்ற புடவைப் பாடசாலைகள்**

---

மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கும் நிறுத்தி வைத்துக் கொள்வதற்கும் போதியளவான செயல்நடவடிக்கை எடுக்கப்படாமையினால் கஹவத்தையில் அமைந்துள்ள ஹிரமடகம மற்றும் நுவரெலியாவில் அமைந்துள்ள சாந்திபுர என்ற புடவைப் பாடசாலைகள் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டன.

**(இ) இழப்பீட்டுப் பணம் செலுத்துதல்**

---

மீளாய்வாண்டின் இறுதியளவில் கைத்தறி ஆலைகள் கலைக்கப்பட்டு 34 வருடங்கள் கடந்திருந்த போதிலும் 3,378 இழப்பீட்டாளர்களுக்காக ரூபா 149,291,000 கூட்டுத்தொகையான இழப்பீட்டுப் பணத்தைச் செலுத்துவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறிருக்கும் போது இழப்பீட்டைச் செலுத்துவதற்காக 2013 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் வரையப்பட்ட ரூபா 159 மில்லியன் கூட்டுத்தொகையான காசோலைகள் 2014 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் இழப்பீட்டாளர்களுக்கு வழங்கப்படாதிருந்ததுடன் அந்தக் காசோலைகள் 2014 ஆகஸ்ட் 31 ஆந் திகதியில் உள்ளவாறும் திணைக்கள வங்கி இணக்கக்கூற்றில் வழங்கப்பட்டிருந்தும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(ஈ) நீர்ப்பாவனை**

---

திணைக்களத்தினால் குறிப்பிடப்பட்ட திகதிக்கு முன்னர் செலுத்தாமையினால் 2013 சனவரி மாதத்திலிருந்து ஆகஸ்ட் மாதம் வரையான காலத்திற்குரிய மிகைக்கட்டணமாக ரூபா 7,429 கூட்டுத்தொகையானது செலுத்தப்பட்டிருந்தது.

**(உ) ஆதன வரி செலுத்துதல்**

---

திணைக்களத்தினால் மீளாய்வாண்டின் போது ஆதனவரி செலுத்துவதிலுள்ள தாமதத்தின் காரணமாக ரூபா 12,060 கூட்டுத்தொகையான தண்டப் பணக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

**(ஊ) மின்சாரப் பாவனை**

திணைக்களத்தின் மின்சாரப் பாவனை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 02 புடவைப் பாடசாலைகளின் விடுதிகளின் மின்கட்டணப் பட்டியல்களைச் செலுத்துவதிலுள்ள தாமதத்தின் காரணமாக மின்சாரம் துண்டிக்கப்பட்டதன் பின்னர் மீள் இணைப்புக் கட்டணமாக ரூபா 2,400 கூட்டுத்தொகையானது செலுத்தப்பட்டிருந்தது.

(ii) திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தின் மின் கட்டணப் பட்டியல் செலுத்துவதிலுள்ள தாமதத்தின் காரணமாக ரூபா 5,002 கூட்டுத்தொகை மிகைக் கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) திணைக்களத்தின் பிரதான கட்டிடத்தின் 4 ஆவது மாடியின் ஒரு பகுதி கைத்தொழில் அமைச்சின் ஆடைகள் ஏற்றுமதி பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக மீளாய்வாண்டிற்காக அறவிட வேண்டிய ரூபா 1,025,072 தொகை 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 5.8 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 05 | 04 | 01 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | - | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 109 | 99 | 10 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 42 | 25 | 17 | - |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ஒப்பந்த) | - | 07 | - | 07 |
| | மொத்தம் | 157 | 135 | 29 | 07 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் காணப்பட்ட 29 வெற்றிடங்களுக்காக உரிய உத்தியோகத்தர்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்குப் புறம்பாக அமைய, தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 07 ஆகும்.